**ஜனவரி – 22**

# TNPSC துளிகள்

- 2020-ல் நடைபெறும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான இந்தியத் தலைவராக இந்திய பளுதூக்குதல் கூட்டமைப்பின் தலைவரான பிரேந்திர பிரசாத் பைஷ்யா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - ஒலிம்பிக் போட்டிக்கான இந்தியத் தலைவர் கௌரவமானது முதன் முறையாக பளுதூக்கும் அணிக்கு வழங்கப்பட்டுள்ளது.
- காங்கோ ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்பு நீதிமன்றமானது அதிபர் தேர்தலில் UDPS கட்சியின் பெலிக்ஸ் சிசெகெடியின் வெற்றியை உறுதி செய்து, 1960 ல் காங்கோவின் சுதந்திரத்திற்குப் பிறகு முதலாவது  சக்திவாய்ந்த, மக்களாட்சிக்கு அதிகாரத்தை மாற்றுவதற்கான பாதையை உருவாக்கியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஆதார் செல்லுபடியாகத் தக்க பயண ஆவணம்

- நேபாளம் மற்றும் பூடான் ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்யும் 15 வயதிற்கு குறைந்த மற்றும் 65 வயதிற்கு மேற்பட்ட இந்தியர்கள் தங்கள் பயணத்திற்கான ஆவணமாக ஆதார் அட்டைகளைப் பயன்படுத்தலாம் என மத்திய உள்துறை அமைச்சகமானது அறிவித்துள்ளது.
- இருப்பினும் 15 வயது முதல் 65 வயது வரையிலான இந்தியர்கள் ஆதார் அட்டையினைப் பயண ஆவணமாகப் பயன்படுத்தி இந்த இரண்டு அண்டை நாடுகளுக்கும் பயணம் செய்ய முடியாது.
- முன்னதாக 65 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் 15 வயதிற்குட்பட்டோர் தங்கள் ஆதார் அட்டையத் தவிர நிரந்தர கணக்கு அட்டை (PAN – Permanent Account Number), ஓட்டுநர் உரிமம், குடும்ப அட்டை ஆகியவற்றை தங்களது அடையாள அட்டையாக காட்ட இயலும்.

# பொருளாதாரச் செய்திகள்

## GST வருவாய் பற்றாக்குறை மீதான குழு

- ஜிஎஸ்டி அமலாக்கத்திற்குப் பின்னர் மாநிலங்கள் எதிர்கொள்ளும் வருவாய் பற்றாக்குறையை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழு பீகாரின் துணை முதல்வரான சுஷில் மோடி தலைமையில் இருக்கும்.
- பஞ்சாப், குஜராத், கோவா, பீகார் மற்றும் இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு ஏப்ரல்-நவம்பர் மாதங்களில் வரி வசூலில் 14-37% அளவில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
- யூனியன் பிரதேசங்களில் புதுச்சேரியானது அதிகபட்சமாக 43% பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது.

- மிசோரம், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், சிக்கிம், நாகலாந்து ஆகிய 5 வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஆந்திரப் பிரதேசம் மட்டுமே GST அமலுக்குப் பிறகு வருவாயில் முன்னேற்றம் கண்டுள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## கைத்தறி நெசவாளர்களுக்கு உதவும் வலைதளம்

- கைத்தறி நெசவாளர்களுக்கு உதவுவதற்காக மைக்கேராசாப்ட் இந்தியாவானது அதன் ரீவேவ் திட்டத்தின் கீழ் மின்னணு வர்த்தக தளமான re-weave.in என்ற தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த மின்னணு வர்த்தக தளமானது கைவினைக் கலைஞர்களையும் நுகர்வோரையும் நேரடியாக இணைக்க உதவும். மேலும் புதிய வாடிக்கையாளர்களுக்கும் சந்தைகளுக்கும் விரிவாக்க வேண்டி இது கைவினைக் கலைஞர்களுக்கு உதவும்.
- மைக்ரோசாப்ட் ஆனது தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து கைத்தறி வடிவமைப்பில் டிஜிட்டல் பயிற்சியளிப்பதற்காக CAD and Color for Handloom Weaving எனும் சிறப்பு பாடத் திட்டத்தையும் தொடங்கியுள்ளது.
- ரீவேவ் திட்டமானது மைச்ரோசாப்ட் இந்தியா (R&D) பிரைவேட் லிமிடெட்டால் அதன் மக்கள் சேவை முயற்சியின் ஒரு பகுதியாக 2016-ல் தொடங்கப்பட்டது.

## அமெரிக்க உளவு செயற்கைக்கோள்

- அமெரிக்க உளவு செயற்கைக்கோளானது கலிபோர்னியாவிலிருந்து அதன் விண்வெளி சுற்றுப்பாதைக்கு செலுத்தப்பட்டது.
- வான்ட்ன்பெர்க் விமானப் படைத் தளத்திலிருந்து தேசிய உளவு பார்க்கும் அலுவலக செயற்கைக் கோளானது சக்தி வாய்ந்த டெல்டா 4 என்ற கனரக ராக்கெட் மூலமாக செலுத்தப்பட்டது.
- NROL-7 என பெயரிடப்பட்ட இந்த திட்டமானது 2006-ல் நிறுவப்பட்ட இந்நிறுவனத்தின் 132-வது வெற்றிகரமான செலுத்துதல் ஆகும்.
- இது கட்டுப்பாட்டு மையம் மற்றும் ஏவுதளத்திற்கிடையேயான தகவல் தொடர்புப் பிரச்சினைகளால் விண்ணில் செலுத்துவது தள்ளி வைக்கப்பட்ட பின்னரான இரண்டாவது முயற்சியில் செலுத்தப்பட்டது ஆகும்.
- தேசிய உளவு பார்க்கும் அலுவலகமானது அமெரிக்க உளவு செயற்கைக் கோள்களுக்குப் பொறுப்பானதாகும்.
- ஒன்றிணைந்த செலுத்துதல் கூட்டணியானது (United Launch Alliance) லாக்ஹீட் மார்டின் மற்றும் போயிங் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

# மாநிலச் செய்திகள்

## திரிபுரா தேயிலைக்கான இலச்சினை வெளியீடு

- திரிபுராவின் முதல்வர் சமீபத்தில் திரிபுரா தேயிலைக்கான அதிகாரப்பூர்வ இலச்சினையை வெளியிட்டார்.
- இந்த திரிபுரா தேயிலை இலச்சினையானது திரிபுராவின் அடையாளச் சின்னமான நீர்மஹாலைக் கொண்டுள்ளது.
- நீர்மஹால் ஆனது திரிபுராவின் மன்னரான பிர் பிக்ரம் கிஷோர் தேப்பர்மான் மானிக்யவாவால் ருத்ரசாகர் ஏரியின் நடுவில் அவரின் கோடைக்கால வசிப்பிடமாகக் கட்டப்பட்டது.
- இது இந்தியாவின் நீரின் நடுவில் அமைந்த மிகப்பெரிய அரண்மனை ஆகும். மேலும் இது இந்தியாவில் நீரின் நடுவில் அமைந்துள்ள 2 அரண்மனைகளில் ஒன்றாகும். மற்றொரு அரண்மனையானது ராஜஸ்தானில் அமைந்துள்ள ஜல் மஹால் ஆகும்.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பிராங்கோ – ஜெர்மன் மனித உரிமைகள் விருது

- காவலில் வைக்கப்பட்டுள்ள சீனாவின் மனித உரிமைகளுக்கான வழக்குரைஞரான யு வென்ஷீங், மனித உரிமைகளுக்கான பிராங்கோ – ஜெர்மன் விருதை வென்றுள்ளார்.
- மனித உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பிற்கு அவரின் சீரிய பங்களிப்பிற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இவர் ஆட்சி கவிழ்ப்பு முயற்சி எனும் வழக்கில் விசாரணையின்றி ஒரு வருடத்திற்கும் மேலாக ஜியாங்சுவின் சுலோவு நகரத்தில் அதிகாரிகளால் தனிக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.
- இவரின் மனைவியான சு யான் மனித உரிமைகள் மற்றும் சட்டவிதிகளுக்கான பிராங்கோ – ஜெர்மன் விருதை சீனாவுக்கான பிரான்ஸ் மற்றும் ஜெர்மன் தூதரிடம் இருந்து தனது கணவரின் சார்பாக பெற்றுக் கொண்டார்.



## ICSI வாழ்நாள் சாதனையாளர் விருது

- தொழிலதிபரும் கோத்ரேஜ் குழுமத்தின் தலைவருமான ஆதி கோத்ரெஜ்க்கு பெருநிறுவன ஆளுமையின் தனிச்சிறப்பை நடைமுறைக்கு மாற்றியதற்காக ICSI-ன் வாழ்நாள் சாதனையாளர் விருது அவருக்கும் வழங்கப்பட்டது.
- இந்த விருதானது ஐம்பதாம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் இந்திய நிறுவன செயலாளர்கள் நிறுவனத்தினால் (Institute of Company Secretaries of India- ICSI) உருவாக்கப்பட்டது ஆகும்.
- 18-வது ICSI தேசிய விருதுகள் பெருநிறுவன ஆளுமையின் தனிச் சிறப்பிற்கான விருதானது சிப்லா இந்தியா, டாபர் இந்தியா மற்றும் கீழ்க்காணும் 5 நிறுவனங்களுடன் இணைந்து வென்று எடுக்கப்பட்டது. அவையாவன
    - ACC நிறுவனம், இந்துஸ்தான் யூனிலிவர் லிட், இந்தியன் ஆயில் நிறுவனம், டாடா மெட்டாலிக்ஸ் மற்றும் இந்திய ஹோட்டல்கள் கோ லிட்.
- 3வது CSR (Corporate Social Responsibility – பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை) தனிச்சிறப்பு விருது கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. அவையாவன
    - GMR ஐதராபாத் சர்வதேச விமான நிலையம் லிமிடெட் (வளர்ந்து வரும் நிறுவனப் பிரிவு).
    - டாடா பவர் கோ லிமிடெட் (நடுத்தர நிறுவனப் பிரிவு).
    - அம்புஜா சிமெண்ட் லிமிடெட் (பெரிய நிறுவனப் பிரிவு).




## மகளிருக்கான குரல் விருது – AKLF 2019

- அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட இந்திய கவிஞரான ரஞ்சனா முரளிக்கு மகளிருக்கான குரல் விருதானது அபீஜெய் கொல்கத்தா இலக்கியத் திருவிழாவின் இறுதி நாளன்று வழங்கப்பட்டது.
- இந்தியப் பெண்களின் ஆக்கப் பூர்வமான எழுத்துகளை அங்கீகரிப்பதும் ஊக்குவிப்பதுமே இந்த விருதின் நோக்கமாகும்.
- ரஞ்சனி முரளியின் இரண்டாவதுப் புத்தகமான “Clearly you are ESL” என்ற புத்தகம் ஆசிரியரின் தேர்வாக உள்ள சிறந்த இந்திய கவிதை சேகரிப்பு என்ற விருதினைப் பெற்றது.
- இவரின் முதல் புத்தகமான "பார்வையற்ற திசைகள்" 2017 ஜூலை மாதம் வெளியிடப்பட்டது.

## சன்சத் ரத்னா விருது

- சென்னையில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் சன்சத் ரத்னா விருதை பாரதீய ஜனதா கட்சித் தலைவரான அனுராக் தாகூருக்கு வழங்கினார்.
- ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக அவரின் சிறப்பு வாய்ந்த செயல்திறனுக்காக இவருக்கு சன்சத் ரத்னா விருது வழங்கப்பட்டது.
- இந்த வெற்றி மூலம் இந்த சிறப்பு வாய்ந்த விருது அளிக்கப் பெற்ற இவர் பிஜேபியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், தேர்வுக் குழுவால் வட இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே உறுப்பினராகவும் அதைப் பெற்றுள்ளார்.
- இந்த விருதானது முன்னாள் குடியரசுத் தலைவர் A.P.J அப்துல் கலாமின்

பரிந்துரைப்படி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயலாக்கத் திறனை கொண்டாடும் விதமாக 2010 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

### பொருட்கள் மீதான ஆய்விற்கான ஷேக் சவுத் சர்வதேச பரிசு

- புகழ்பெற்ற இந்திய அறிவியலாளரான CNR ராவ் ஐக்கிய அரபு அமீரகத்தின் மேம்படுத்தப்பட்ட பொருட்களுக்குக்கான மையத்தின் முதலாவது ஷேக் சவுத் மூலப் பொருட்கள் மீதான ஆராய்ச்சிக்கான சர்வதேச விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- CNR ராவ் எனப் பிரபலமாக அறியப்படும் சிந்தாமணி நாகேச ராமச்சந்திர ராவிற்கு 2014-ல் ஆண்டில் குடிமக்களுக்கான மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.
- தற்போது இவர் மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சிக்கான ஜவஹர்லால் நேரு மையத்தின் கௌரவ தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

## முக்கிய தினங்கள்

### 47வது மாநில தினம் – ஜனவரி 21

- மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் தங்கள் 47வது மாநில தினத்தை 2019 ஜனவரி 21 அன்று கொண்டாடின.
- 1972 ஆம் ஆண்டு இதே நாளில் வடகிழக்குப் பிராந்திய (மறுசீரமைப்பு) சட்டம் 1971-ன்படி இந்த 3 மாநிலங்களும் முழுமையான மாநிலங்களாக மாறின.




- முந்தைய சுதேச அரசுகளான திரிபுரா மற்றும் மணிப்பூர் ஆகியவை 1949 ஆம் ஆண்டு இந்தியாவில் இணைந்தன.

- மேகாலயாவானது முழு மாநிலமாக மாறுவதற்கு முன்னர் அசாம் மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

- - - - - - - - - - - - - - -